52

# ஜீவத் தண்ணீர்[1]

## யோவா. 7:37-39, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*எவரெஸ்டு சிகரம் உலகின் மிக உயரமான மலை உச்சியாக உள்ளது. இமயமலையின் உயரமான பகுதியில் அமைந்துள்ள இது, கடல் மட்டத்தில் இருந்து, 29,028 அடிகள்[2] உயரத்திற்கு எழுந்து உயர்ந்து நிற்கிறது - இது பூமியின் வானவெளி தூரத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆகும். 1920களில் இருந்து இதன் உச்சிக்குச் செல்லுவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. முப்பது ஆண்டுகள் அளவாக, ஒன்பது முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன மற்றும் ஒன்பது தோல்விகள் அனுபவிக்கப்பட்டன. 1952ல் மலை ஏறும் வீரர்களின் உயர்திறமை வாய்ந்த ஒரு குழுவை ஸ்விட்சர்லாந்து நாடு ஏற்பாடு செய்திருந்தது. அவர்கள் பல மாதங்களாகத் தங்களைத் தயார் செய்துகொண்டு, திட்டத்தை மிகவும் கவனமாகச் செயல்படுத்தினார்கள், ஆனால் கடைசியில், மன அழுத்தம் மற்றும் களைப்படைதல் ஆகியவற்றின் காரணமாக அவர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று.*

*தொடர்ந்து வந்த ஆண்டில், இங்கிலாந்து நாடு, கர்னல் ஜான் ஹன்ட் என்ற மருத்துவரின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அந்த மருத்துவர், சுவிட்சர்லாந்து நாட்டின் முயற்சியைப் பற்றி படித்தபோது, ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு நாளைக்கு இரண்டு கோப்பை தண்ணீர் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்ததைக் கவனித்தார். அவர் பனியை உருக்கும் கருவியைச் சுமந்து செல்வதற்கு ஏற்பாடு செய்தார், எனவே மலையேறும் ஒவ்வொருவரும் தினசரி குறைந்தது பன்னிரெண்டு கோப்பை தண்ணீரைப் பெற முடிந்தது. 1953 மே 29ம் நாளில், இந்த சாதனைப் பயணமானது தனது கொடியை உலகின் மிக உயர்ந்த மலையின் உச்சியில் நாட்டியது.[3] போதுமான அளவு தண்ணீர் தருதல் என்பது மாறுபாட்டை ஏற்படுத்தி யிருந்தது.[4]*

*இன்றைய நாட்களில் நாம், தண்ணீரின் பயன்மிக்க செயல்விளைவை மறுபடியும் கண்டுபிடிக்கின்றோம். அமெரிக்காவில், காபி, டீ மற்றும் கோக் ஆகியவற்றைக் குடிக்கும் தலைமுறையினரிடத்தில், நாம் அதிகம் தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது: தினமும் குறைந்தது எட்டிலிருந்து பத்து கோப்பைகள் தண்ணீர் குடிக்க வேண்டும். நமது உடல் நலம் தண்ணீரைச் சார்ந்ததாகவே இருக்கிறது என்று மருத்துவ அதிகாரிகள் கூறுகின்றனர்.*

*நமது உடல்களுக்கு இயல்பான தண்ணீர் தேவைப்படுவது போலவே,*

*நமது ஆத்துமாக்களுக்கு ஆவிக்குரிய தண்ணீர் தேவைப்படுகிறது. இது நமது வேத பாடப் பகுதியில் வலியுறுத்தப்படுகிறது:*

> *பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்' " என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவா. 7:37-39).*

## காலந்தோறும் கனப்படுத்தப்பட்ட சடங்காச்சாரங்களில் கிறிஸ்துவின் இடைமறித்தல்

*கிறிஸ்துவின் வார்த்தைகளை மதித்து உணருவதற்கு நீங்கள், இங்கு குறிப்பிடப்பட்ட பண்டிகையைப் பற்றியும் இந்தப் பண்டிகையின்போது ஆசரிக்கப்பட்ட தண்ணீர்ச் சடங்காச்சாரம் பற்றிச் சில விஷயங்களையும் அறிந்திருக்க வேண்டும். இந்தப் பண்டிகை கூடாரங்களின் பண்டிகையாக இருந்தது (யோவா. 7:2), இது யூதர்களுக்கு ஆண்டில் கடைசி மாபெரும் கொண்டாட்டமாக இருந்தது. உங்களிடத்தில் காலக்கருவி ஒன்று இருந்து, இஸ்ரவேலின் பண்டிகைகள் நோக்கிப் பின்செல்ல முடியும் என்றால், இந்தப் பண்டிகை, நீங்கள் மிகவும் மகிழ்வுடன் அனுபவிக்கும் பண்டிகைகளில் ஒன்றாக இருக்கும்.*

*இந்தப் பண்டிகை செப்டம்பர் மாதத்தின் பிற்பகுதியில் அல்லது அக்டோபர் மாதத்தின் முற்பகுதியில் நடைபெற்றது. இது யூதர்களின் மூன்று பிரதான பண்டிகைகளில் ஒன்றாக இருந்தது,[5] இது உலகம் முழுவதிலும் இருந்த யூத ஆண்கள் யாவரும் எருசலேமில் ஒன்றுகூடும் வேளையாக இருந்தது. இது ஒரு நாள் பண்டிகையல்ல, ஆனால் ஏழு நாள் வைபவங்களை உள்ளடக்கியிருந்தது. கர்த்தர் இந்தப் பூமியில் வாழ்ந்திருந்த நாட்களின் போது, இத்துடன் எட்டாவது நாள் ஒன்று கூட்டப்பட்டிருந்தது: பரிசுத்த ஓய்வுநாள்.*

*யூதர்களின் மற்ற பண்டிகைகளைப் போலவே, இதுவும் மக்களுக்குத் தனிச்சிறப்பான அடுக்குகளைக் கொண்டிருந்தது. முதலாவது இது வரலாற்றுத் தனிச்சிறப்பைக் கொண்டிருந்தது: இது அவர்களின் முன்னோர்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த நாட்களை நினைவு கூருதலாக இருந்தது (லேவி. 23:43). இந்தப் பண்டிகையின்போது, யூதர்கள் வீடுகளுக்கு வெளியில் - வில்லோ மரக்கிளைகள் மற்றும் பனைமரத்து மட்டைகள் ஆகியவற்றால் தங்களின் சொந்தக் கைகளினால் போடப்பட்ட - தற்காலிகக் கூடாரங்களில் வசித்தார்கள் (லேவி. 23:40).[6] இந்தக் கூடாரங்கள் தெருக்களிலும், கூரைகளின் மேலும், தேவாலயத்தைச் சுற்றியுள்ள இடங்களிலும் மற்றும் எருசலேமைச் சுற்றியிருக்கும் மலைப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. தந்தையர்களும் அவர்களின் மகன்களும்,*

*தாய்மார்களும் அவர்களின் மகள்களும், தாத்தா பாட்டிகள் யாவரும் இந்தக் கூடாரங்களில் வசித்தார்கள். அங்கே அந்த வாரம் முழுவதிலும் அவர்கள், தேவன் தமது மக்களுக்கு, [வனாந்தரத்தில்] அலைந்து திரிந்த நாற்பது ஆண்டுகளின்போது எவ்வாறு அவர்களுக்குத் தேவையானவற்றை அளித்திருந்தார் என்பதை நினைவுகூருகையில், அங்கேயே தூங்கி, அங்கேயே உணவு உண்டு, அங்கேயே ஜெபித்து, அங்கேயே படித்து தங்கி இருந்தார்கள்.*

*இந்தப் பண்டிகையானது கடந்த காலத்தில் தேவனுடைய அருளிரக்கத்தைக் கொண்டாடுவதுடன் கூட, நிகழ்காலத்தில் தேவனின் அருளிரக்கத்தைக் கொண்டாடுதலாகவும் இருந்தது. இது விவசாயம் சார்ந்த தனிச் சிறப்பை உடையதாக இருந்தது: இது பிரதான பயிர்கள் - வாற்கோதுமை, கோதுமை மற்றும் திராட்சை என்ற - முக்கிய பயிர்கள் விளைந்து சேர்க்கப்பட்ட பின்பு வந்த அறுவடையின் பண்டிகையாக இருந்தது.[7] மக்கள், ஏராளமான அறுவடைக்காகத் தேவனுக்கு நன்றிசெலுத்தி, வரும் ஆண்டில் தங்கள் பயிர்களை ஆசீர்வதிக்கும்படி அவரிடத்தில் விண்ணப்பித்தார்கள். பூமியிலிருந்த எழுபது மக்களினங்களுக்காக எழுபது காளைகள் பலியிடப்பட்டன. சடங்கு வைபவத்தில் 446 ஆசாரியர்களும் அதற்கு இணையான எண்ணிக்கையில் லேவியர்களும் கலந்துகொண்டார்கள். தேவாலய முற்றங்களில் இருபத்தியோரு எக்காளங்கள் முழங்கின. பெண்களின் முற்றத்தில் ஒரு பெரிய சரவிளக்கு தொங்கவிடப்பட்டது, அதில் தேவாலயத்தைப் பளிச்சிடவும் அதன் அயலகங்களை பிரகாசிப்பிக்கவும் கூடுமளவுக்கு ஒளிமிக்க விளக்குகள் ஏற்றப்பட்டன.[8] இரவு வேளையில் மனிதர்கள் [ஆண்கள்] விளக்கொளியில் நடனம் செய்தார்கள். இது யூதர்களின் பண்டிகை நாட்களில் மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக இருந்தது![9]*

*இது நம்மை இந்தப் பண்டிகையின் மைய அமைவுக்குக் கொண்டு வருகிறது: தினசரித் தண்ணீர்ச் சடங்குகள். ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும், வெள்ளை அங்கி தரித்த ஆசாரியர்கள், தேவாலயத்திலிருந்து மலையின் கீழ் இறங்கி, கீயோனின் ஊற்றில் இருந்து தண்ணீர் வந்து நிறைந்த ஒரு குளமான சீலோவாம் குளத்திற்குப் பண்டிகையைக் கொண்டாடுபவர்களின் ஊர்வலத்தை நடத்திச் செல்லுவார்கள்.[10] இது அந்த நகருக்குப் பிரதானமான தண்ணீர் ஆதாரமூலமாக இருந்தது, குடிநீர் ஆதார மூலமாக[வும்] இருந்தது. அவர்கள் அந்த குளத்தை அடைந்ததும், ஆசாரியர்களில் ஒருவர் பளபளக்கும் பொற்குடம் ஒன்றை எடுத்து அந்தக் குளத்தில் அமிழ்த்தி, அதை [குடத்தை] தண்ணீரினால் நிரப்புவார். அவர் இவ்வாறு செய்யும்போது, மக்கள் "நாங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்வோம்!'' என்று ஆர்ப்பரிப்பார்கள் (ஏசா. 12:3).*

*பின்பு ஆசாரியர், அந்தக் குடத்தைத் தமது தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக் கொண்டு மலை மேலே தேவாலயத்தை நோக்கி ஊர்வலத்தை நடத்துவார். மக்கள் நடந்துகொண்டே, சங்கீதம் 113-118ஐ உச்சரித்துக் கொண்டு வருவார்கள், அது ''கர்த்தாவே, [எங்களை] இரட்சியும்; கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும்!"; "கர்த்தரைத் துதியுங்கள்,*

அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது" என்ற வசனங்களைக் கொண்டு முடியும் (சங். 118:25, 29). அவர்கள் [தேவாலயத்தின்] உள்முற்றத்தின் தெற்குப் பகுதியில் இருந்த தண்ணீர் வாசலை நெருங்குகையில், மூன்று எக்காளங்கள் ஊதுதலைக் கொண்டு அவர்கள் வாழ்த்தப்படுவார்கள்.

ஆசாரியர், தகனபலி செலுத்தும் பலிபீடத்திற்குச் செல்லும் சரிவுப் பாதையில் நடப்பார். ஆயிரக்கணக்கான மக்கள் பனையோலைகளையும் வில்லோ மரக்கிளைகளையும் கைகளில் பிடித்து அசைக்க, அவர் அந்தக் குடத்தை உயர்த்திப் பிடிப்பார். பின்பு அவர் மெதுவாக அந்தத் தண்ணீரை ஒரு வெள்ளிக் கூம்பில் ஊற்றுவார், அதின் வழியாகத் தண்ணீர் தரையில் வழிந்தோடும். மக்கள் துதிகளை உரக்கக் கூவுவார்கள், எக்காளங்கள் முழங்கும்.[11]

இந்தச் சடங்கானது, தேவன் வனாந்தரத்தில் தண்ணீரை அளித்தபோது தண்ணீர் கன்மலையில் இருந்து புறப்பட்டு வந்ததைக் கொண்டாடியது (யாத். 17;[12] எண். 20; உபா. 8:15; சங். 105:41 ஆகிய வசனங்களைக் காணவும்). இது, தண்ணீருக்காகத் தேசத்தின் அத்தியாவசியத் தேவையையும் ஒப்புக்கொண்டிருந்தது. அந்தப் பகுதியானது மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை ஒரு சிறிதளவே மழையைப் பெற்றிருந்தது. பண்டிகைக்குப் பின்பு விரைவில் மழை பெய்யாவிட்டால், அடுத்த ஆண்டில் பயிர்கள் எதுவும் இராது. இவ்விதமாக இந்தக் கொண்டாட்டமானது கடந்த காலத்தில் தேவனின் பராமரிப்புக்கு நன்றி செலுத்துதலாகவும், எதிர்காலத்தில் தேவனுடைய அளிப்புக்காக விண்ணப்பித்தலாகவும் இருந்தது. இந்தச் சடங்காச்சாரமானது சிறுபிள்ளைகளை ஆச்சரியத்தினால் கண்களை அகலத் திறக்கச் செய்தது, பெண்களின் இருதயங்களை மகிழ்ச்சியினால் நிரப்பிற்று, வயது முதிர்ந்த மனிதர்களை மீண்டும் இளைமையைப் பெற்றது போல் உணரச் செய்தது. இது மனதில் பதியும் காட்சியாக இருந்தது.

உணர்வெழுச்சி மிகுந்த இந்த வைபவத்தின் மத்தியில், இயேசு எழுந்து நின்று சத்தமிட்டார் (வ. 37அ). அவர் எழுந்து நின்றார் என்ற உண்மையானது தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது; வழக்கமாக அவர் போதிப்பதற்கு உட்கார்ந்தார் (யோவா. 8:2ஐக் காணவும்). அவர் சத்தமிட்டார் என்ற உண்மையானது கவனிக்கத் தக்கதாக உள்ளது; அவர் போதித்த வேளைகளில் எப்போதாவதுதான் தமது குரலை உயர்த்தினார் என்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும் அவரது செய்திதான் மிகவும் முக்கியமானதாக உள்ளது: "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்' " (7:37ஆ, 38).

கிறிஸ்துவின் வார்த்தைகள் இடைமறிப்பவையாக - திகைப்புக்குரியதாக, இதற்கு முன் நடைபெற்றிராத இடைமறித்தலாக - இருந்தன.[13] அவர் செய்தது துடுக்குத்தனமானதாக, ஆவேசமிக்கதாக இருந்தது. உண்மையில் அவர், காலந்தோறும் கனப்படுத்தப்பட்ட வைபவத்தைப்[14]

பற்றி, "அதில் ஜீவன் உள்ளது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இல்லை, என்னைக் கண்ணோக்குங்கள்!'' என்றே கூறினார். சடங்குகளிலும் வைபவங்களிலும் அல்ல, ஆனால் தமக்குள்ளேதான் ஜீவன் காணப்பட முடியும் என்பதை மக்கள் அறியும்படிக்கு அவர் விரும்பினார்.

அந்தச் செய்தி முதல் நூற்றாண்டில் தேவைப்பட்டிருந்தது; அது இருபத்தியோராம் நூற்றாண்டில் இன்னமும் தேவைப்படுகிறது. நாம் கவனமாக இல்லையென்றால், நாம் *செய்கின்றவையே* நமது ஆவிக்குரிய பெலத்திற்கான ஆதாரமூலமாக உள்ளது என்று நாம் நினைத்து விடலாம். ஆராதனை என்பது, வேதாகமங்கள், பாடல் புத்தகங்கள், கர்த்தரின் பந்தித் தட்டுகள் மற்றும் காணிக்கைத் தட்டுகள் என்பவை உள்ளடங்கிய சடங்காச்சாரத்திற்குச் சற்றே அதிகமானதாகக் கூடும்.[15] ஆராதனயில் நாம் செய்கின்ற யாவும், ஜீவனுள்ள கர்த்தரை எதிர்கொள்ளுதல் என்ற முடிவை நோக்கி நடத்தும் வழிமுறையாக மட்டுமே உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால், நாம் அசைவுகளை - கவனித்தல், பாடுதல், நிற்குதல், அமருதல், நமது தலைகளைத் தாழ்த்துதல், நமது தலைகளை உயர்த்துதல் போன்றவற்றை - கடந்து சென்றும், ஆராதிக்கும் கட்டிடத்தை விட்டு, எரிகிற ஆவிக்குரிய தாகத்துடன் செல்லுபவர்களாய் இருப்போம். அந்த தாகமானது, நம்மை நமது ஆராதனையானது, ஜீவத்தண்ணீர் பெருக்கெடுத்து வருகிற இயேசு கிறிஸ்து என்ற "ஆவிக்குரிய கன்மலையினிடத்தில்'' கொண்டு சேர்க்கும்போது மாத்திரமே தணிக்கப்படுகிறது (1 கொரி. 10:4).

நம் எல்லாருக்கும் யோவான் 7:37-39ன் செய்தி தேவையானதாக உள்ளது. முதலில் நாம் இயேசுவின் வாக்குத்தத்தத்தைக் கண்ணோக்கு வோம். பின்பு நாம், அந்த வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிபந்தனைகளின்மீது கவனம் குவிப்போம்.

## பெருக்கெடுக்கும் நதிகள் பற்றி கிறிஸ்துவின் வாக்குத்தத்தம்

தாகமுள்ளவன் வரட்டும் என்று கிறிஸ்து வற்புறுத்திய பின்பு, "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, 'அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்'" என்று அறிவித்தார் (வ. 38). அவர் தமது சிந்தையில் கொண்டிருந்த வேதவாக்கியம் எது என்பதை நாம் உறுதியாய் அறிவதில்லை. குறிப்பாக அந்த வார்த்தைகளைக் கொண்ட பழைய ஏற்பாட்டு வசனங்கள் எதுவும் இல்லை. ஆயினும் அந்தச் சிந்தனையானது, ஏசாயா 44:3; 55:1; எசே. 47:1-11; மற்றும் சக. 13:1; 14:8 உட்படப் பழைய ஏற்பாட்டின் வேத வசனப்பகுதிகள் பலவற்றில் பிரதிபலிக்கப்பட்டிருந்தது. வசனங்கள் 37 மற்றும் 38 ஆகியவை கிரேக்கம் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒரு தெளிவற்ற தன்மையைக் கொண்டுள்ளன என்பது இவ்வசனப் பகுதியின் இன்னொரு அறைகூவலாக உள்ளது. KJV, NASB மற்றும் பிற மொழிபெயர்ப்புகள்[16] பலவற்றின் நிறுத்தற்குறி முறைமையின்படி, "அவன்

உள்ளத்திலிருந்து” என்ற சொற்றொடர் விசுவாசியைக் குறிக்கிறது; ஆனால் நிறுத்தற்குறி முறைமையில் சற்றே இலேசான மாறுதல்களுடன், இந்தக் குறிப்பானது ஜீவத் தண்ணீரின் ஆதாரமூலம் என்ற வகையில் இயேசுவுக்குரியதாக உள்ளது: “... ‘ஒருவன் தாகமாயிருந்தால், என்னிடத்தில் வரக்கடவன். மற்றும் என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ [அவன்] பானம்பண்ணக் கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.’ ” “ஆனால் இதில் அவர் ஆவியானவரைப் பற்றிப் பேசினார்”[17] ஆயினும் இப்படிப்பட்ட விவரங்கள், சார்பு நிலையில் முக்கியமற்றவைகளாக உள்ளன. கர்த்தருடைய முக்கிய கருத்து தெளிவாக உள்ளது. *அவரிடம்* வருகின்றவர் மட்டுமே ஆவிக்குரிய வகையில் புத்துணர்வடைந்தவராய் இருப்பார்:

(1) இயேசு, *தண்ணீரை*, ஆவிக்குரிய தண்ணீரை வாக்குத்தத்தம் செய்துள்ளார். உணவில் தண்ணீரின் முக்கியத்துவத்தை மக்கள் மீண்டும் கண்டுபிடித்துக் கொண்டுள்ளார்கள் என்பதை இந்த எடுத்துரைப்பின் துவக்கத்தில் நாம் குறிப்பிட்டோம். ஹார்வர்டு[18] பல்கலைக் கழகத்தின் உடற்கூறுவியலாளரான மருத்துவர் G. C. பிட்ஸ் என்பவர், தண்ணீருக்கும் உடல்ரீதியான தாங்கும் தன்மைக்கும் இடையில் உள்ள உறவுமுறையைப் பற்றி ஒரு ஆய்வை நடத்தினார். அவர், ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளும் ஆண் வீரர்களை ட்ரெட்மில்[19] என்ற பயிற்சிக் கருவிகளில் மணிக்கு மூன்றரை மைல்கள் வேகத்தில் நடக்க வைத்தார். அவர்கள் தொடர இயலாத அளவு களைப்படையும் வரையில் நடக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இந்தப் பரிசோதனையின்போது, ஒரு குழுவுக்குத் தண்ணீர் தரப்படவில்லை. அவர்கள் மூன்றரை மணி நேரமாக செயல் பட்டார்கள். இரண்டாவது குழுவானது அவர்களின் உடல்களில் உள்ள தண்ணீர் அளவு குறித்து அந்த சோதனையின்போது கவனமாகக் கண்காணிக்கப்பட்டது. இந்த விளையாட்டு வீரர்களுக்கு நிலையான மட்டத்தைப் பராமரிக்கும் அளவுக்குத் தண்ணீர் தரப்பட்டது. இவர்களுக்குச் சராசரியாகப் பதினைந்து நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரு கோப்பை தண்ணீர் வழங்கப்பட்டது. இரண்டாவது குழுவானது ஏழு மணி நேரங்களுக்குப் பின்பு செயல்படுவதிலிருந்து நிறுத்தப்பட்டது, அப்போதும் கூட அவர்களிடம் களைப்படைந்தமைக்கான அறிகுறியே காணப்பட வில்லை. அவர்கள், மருத்துவர் விரும்பும் வரை தாங்கள் தொடர்ந்து செயல்பட முடியும் என்று கூறினார்கள்.

தண்ணீர் மற்றும் உடல் களைப்பு ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவுமுறையானது ஆவிக்குரிய நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது. மக்களில் பலர் ஆவிக்குரிய புதுப்பித்தல் இன்றியே பல ஆண்டுகளாக வாழ்வின் ட்ரெட்மில் என்ற கருவியை இயக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் உள்ளாக சக்தி தீர்ந்தவர்களாக, ஆவிக்குரிய வகையில் களைப்புற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் தங்களைத் தொடர்ந்து இயங்கச் செய்யும் ஆவிக்குரிய தண்ணீரின் ஆதாரமூலமாக இருப்பவர் *கிறிஸ்துவே* என்பதை உணர்ந்து அறிய வேண்டியது அவசியமாக உள்ளது.

*(2) இயேசு, ஜீவத்தண்ணீரை வாக்குத்தத்தம் செய்துள்ளார். அவர், "அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று கூறினார் (யோவா. 7:38).[20] முன்னதாக அவர், சமாரியாவில் கிணற்றருகில் ஒரு பெண்ணிடத்தில், "நீ தேவனுடைய ஈவையும், 'தாகத்துக்குத் தா' என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்" என்று கூறியிருந்தார் (யோவா. 4:10). ஜீவத் தண்ணீர் என்பது வாழ்வின் அத்தியாவசியமானதாக உள்ளது; இதுவே ஆத்துமாவைத் திருப்திப்படுத்துகிறதாக உள்ளது. சமாரியப் பெண்ணிடத்தில் இயேசு, "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" என்று கூறினார் (யோவா. 4:14). ஜீவ தண்ணீர் என்பது பரலோகத்தின் சந்தோஷத்திற்கு ஒரு முன்சுவையாக உள்ளது (வெளி. 7:17; 21:6; 22:1, 17).*

*(3) இயேசு, ஜீவத்தண்ணீருள்ள நதிகள் பற்றி வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார். வாக்குத்தத்தத்தை மீண்டும் ஒருமுறை கண்ணோக்குங்கள்: "அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவா. 7:38). அவரது ஆவிக்குரிய அளிப்பின் ஏராளத் தன்மையே இங்கு வலியுறுத்தமாக உள்ளது. சமாரியப் பெண்ணிடம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ''தண்ணீருள்ள கிணறு'' என்பது இப்பொழுது "தண்ணீருள்ள நதிகள்" என்பதாக மாறியிருந்தது என்று யாரோ ஒருவர் குறிப்பிட்டார்.*

*ஆண்டெஸ் மலைகளின் உச்சியில், கடல் மட்டத்திலிருந்து 17,000 அடிகள் உயரத்தில், ஒரு அடி அகலமே உடைய ஒரு சிறு ஊற்று தொடங்குகிறது. நான்காயிரம் மைல்களுக்குப் பின்பு, அது உலகின் பலம் வாய்ந்த நதியான அமேசான் நதியுடன் கலக்கின்றது. அமேசான் நதியின் முகத்துவாரத்தில், தண்ணீரானது ஒரு வினாடிக்கு 75 இலட்சம் கன அடி என்ற அளவில் அட்லாண்டிக் கடலில் பெருக்கெடுத்துப் பாய்கிறது. அந்தத் தண்ணீரைப் பிடிக்க முடியுமென்றால், ஒரு நாளில் பெருக்கெடுக்கும் தண்ணீரைக் கொண்டு நியூயார்க் நகரின் தண்ணீர்த் தேவைகளை ஒன்பது ஆண்டுகளுக்கு நிறைவு செய்ய முடியும்.[21] கடலில் கலந்த பின்னும் அறுபது மைல்கள் அளவுக்குத் தண்ணீர் அடிப்படையில் சுத்தமான குடிநீராக இருக்கும் அளவுக்கு [இந்த நதியில் இருந்து] அப்படிப்பட்ட அதிக சக்தியுடன் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இவ்வளவு பலம் வாய்ந்த நதியாகப் பெருக்கெடுக்கும் அந்தச் சின்னஞ்சிறிய ஊற்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். பின்பு, உலகம் முழுவதிலும் பரவிப் பெருக்கெடுத்து ஆசீர்வாதத்தின் பலம் வாய்ந்த நதிகளாக மாறியுள்ள கிறிஸ்தவத்தின் சின்னஞ்சிறு தொடக்கத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள்.[22]*

*மீண்டும் நான், ''நதிகள்'' என்ற வார்த்தையானது கிறிஸ்துவினால் அளிக்கப்படுகின்ற ஆசீர்வாதத்தின் ஏராளத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது என்று கூறுகின்றேன். அவர், "அவைகளுக்கு [மனிதர்களுக்கு] ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்று கூறினார்*

*(யோவா. 10:10).*

*யோவானின் கூற்றுப்படி, கர்த்தரால் அளிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட ஆசீர்வாதத்தை இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார்: பரிசுத்த ஆவியானவரின் வரம். கிறிஸ்து, ''அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்'' என்று கூறியதை (யோவா. 7:38) மேற்கோள் காண்பித்த பின்பு, அப்போஸ்தலர் [யோவான்] ஏவுதல் பெற்ற பின்வரும் விளக்கத்தை உட்செருகினார்: "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து[23] இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்பட வில்லை" (வ. 39).*

*இயேசு மற்றும் அவருடன் இணைந்திருந்தவர்களின் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல் துடிப்புடன் இருந்தபடியால் (மத். 1:18, 20; 3:16; 4:1; 12:18, 28; லூக். 1:15, 41, 67; 2:25-27; 4:1, 18; 10:21), "பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்ற சொற்றொடருக்கு விளக்கம் தேவைப்படுகிறது. கிறிஸ்து தாம் பரத்துக்கேறின பின்பு (யோவா. 14:26; 15:26; 16:13), தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, மகிமைப் படுத்தப்பட்ட பின்பு (அப். 2:33; ரோமர் 8:34; எபே. 1:20; கொலோ. 3:1; எபி. 1:3, 13; 10:12; 12:2; 1 பேது. 3:22) பரிசுத்த ஆவியானவரை அனுப்ப விருந்ததைப் பற்றி இங்கு குறிப்பிட்டார். அந்த விசேஷித்த நிகழ்ச்சியானது இன்னும் எதிர்காலத்திற்குரியதாக இருந்தது.[24]*

*யோவான் 7:39க்கு அப். 1 மற்றும் 2 ஆகிய அத்தியாயங்களே மிகச் சிறந்த விளக்கவுரையாக உள்ளது. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள் ..." என்று கூறினார் (அப். 1:8அ). கிறிஸ்து பரத்துக்கு ஏறியபின்பு பத்து நாட்கள் கழித்து, பெந்தெகொஸ்தே என்ற யூதருடைய பண்டிகை நாளில், பன்னிருவரும் "பரிசுத்த ஆவியான வரால் நிரப்பப்பட்டார்கள்" (அப். 2:1-4). இதைப் பேதுரு, ஆவியான வருக்குள் ஞானஸ்நானம் என்று பிற்பாடு அடையாளப்படுத்தினார் (அப். 11:15, 16). பின்பு, பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு அங்கிருந்தவர் களிடத்தில், ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று கூறினார் (அப். 2:38).*

*அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவரின் வரம், ஒரு அற்புத வரமாக இருந்தது; ஞானஸ்நானப்படுத்தப்படும் எல்லாரும் பெற்றுக்கொள்ளும் வரமானது ஒரு அற்புதமற்ற வரமாக இருந்தது (மற்றும் இருக்கிறது). இது கர்த்தருக்குக் கீழ்ப்படிகின்ற எல்லாருக்கும் தரப்படுகிற ஒரு வரமாக (அப். 5:32), அவரது குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக இருக்கின்ற எல்லார்மீதும் பொழியப்படுகிற ஒரு வரமாக (கலா. 4:6; எபே. 1:13, 14) இருக்கிறது. இது தேவன் தமது பிள்ளைகளைப் பெலப்படுத்தி நிலைநிறுத்துவதற்குத் தமது சொந்தப் பிரசன்னத்தின் வரமாக உள்ளது. ரோமர் 8ம் அத்தியாயம், நமக்கு சில திட்டவட்டமான குறிப்புகளைத்*

தருகிறது: தேவனுடைய ஆவியானவர், சரீரத்தின் செய்கைகளை அழிப்பதற்கு நமக்கு உதவுகின்றார் (வ. 13); அவர், நமது பலவீனங்களில் நமக்கு உதவுகின்றார் (வ. 26); அவர், நாம் ஜெபிப்பதற்கு உதவுகின்றார் (வ. 26).[25] ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஆவியானவர் என்ன செய்கின்றார் என்பதற்கு, ஒருவேளை மிகவும் பொருத்தமான விவரிப்பாக இருக்கக் கூடிய யோவான் 7:38, 39ன் வாக்குத்தத்தத்திற்கு அப். 3:19ன் வார்த்தையமைப்பானது ஒரு உதவியுரையைக் கருத்தாகத் தெரிவிக்கிறது: அவர், ‘‘கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்க[ளை] ...’’ நமக்குக் கொண்டு வருகின்றார்.[26]

யோவான் 7:39க்குத் திரும்புவோம், இதில் “விசுவாசிக்கிறவர்கள்” என்பது திறவுகோல் வார்த்தையாக உள்ளது: “தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்.” கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருந்த அப்போஸ்தலர்கள் ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்வார்கள். அவர்களின் பிரசங்கித்தலின் விளைவாக இயேசுவில் விசுவாசம் கொள்கின்றவர்கள் பரிசுத்த ஆவியானவரை ஒரு வரமாகப் பெற்றுக்கொள்வார்கள் (அப். 2:36-38). இருப்பினும், கர்த்தரை எதிர்த்து நிற்பவர்கள், அவரில் விசுவாசம் கொள்ளாதவர்கள், அந்த வாக்குத்தத்தத்தில் பங்கு பெற்றிருப்பதில்லை.

## கிறிஸ்துவின்மீது தாகமாயிருப்பவர்களுக்கு அவரது நிபந்தனைகள்

யோவான் 7:37-39ன் வாக்குத்தத்தங்கள் பற்றி நாம் இன்னும் பேச முடியும்,[27] ஆனால் இந்த வேளையானது, இவ்வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கு என்ன தேவைப்படுகிறது என்பதைப் பேச வேண்டிய வேளையாக உள்ளது. நமது வேதபாடப் பகுதியானது மூன்று நிபந்தனைகளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது: நாம் ஒப்புக்கொள்ள வேண்டும், நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் நாம் செயல்பட வேண்டும்.

(1) நாம் நமது தேவையை ஒப்புக்கொள்ள வேண்டும். இயேசு தமது செய்தியை, “ஒருவன்[28] தாகமாயிருந்தால், என்னிடத்தில் வந்து ...” என்று கூறித் தொடங்கினார் (யோவா. 7:37). தாகம் என்பது அவரது உரையைக் கேட்டவர்களுக்கு ஒரு அளவையியல் சொற்றொடராக இருந்தது. நம்மில் பெரும்பாலானவர்கள், தாகம் என்றால் என்னவென்று உண்மையிலேயே அறியாதவர்களாய் இருக்கின்றோம்,[29] ஆனால் அவர்கள் அதை [நன்கு] அறிந்திருந்தார்கள். அவர்கள் அப்போதுதான் ஒரு ஆண்டு காலமான வறட்சியினூடே கடந்து வந்திருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டிலும் மே மாதம் தொடங்கி, மழையானது முற்றிலும் நிறுத்தப்பட்டது போன்ற நிலை ஏற்பட்டிருந்தது. மே மாதத்தின் எஞ்சிய நாட்கள், ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தின் முற்பகுதி ஆகிய காலங்களில் மழையே பெய்யவில்லை. எருசலேமுக்குக் கிழக்கே இருந்த சுட்டெரிக்கப் பட்ட மலைப் பகுதிகள், நிலவின் மேற்பரப்பு போல் காணப்பட்டன.[30]

அரபுப் பாலைவனத்தில் சூடான கீழ்க் காற்று, உடலின் ஒவ்வொரு சிறுதுளையிலும் தூசியடையும் அளவுக்குப் புழுதி மேகங்களைக் கூட்டிக் கிளப்பிவிட்டன. சங்கீதக்காரர் தமது நாவு தமது மேல்வாயோடு ஒட்டிக் கொள்ளுதல் பற்றி எழுதியபோது, அர்த்தப்படுத்தியது என்ன என்பதை அந்தப் பகுதியில் வாழ்ந்த ஒவ்வொருவரும் புரிந்துகொண்டிருந்தார்கள் (சங். 137:6). அவர்கள் "ஒரு கலசம் தண்ணீரு[க்கு]" (மத். 10:42) ஏங்குதல் என்பது எதை அர்த்தப்படுத்திற்று என்பதை அறிந்திருந்தார்கள்.

கிறிஸ்து, ஆவிக்குரிய உயர்வான ஒரு தேவையைச் சுட்டிக் காண்பிப்பதற்கு, சரீரப்பிரகாரமான அடிப்படைத் தேவை ஒன்றைப் பயன் படுத்தினார். மலைப்பிரசங்கத்தில் அவர், "நீதியின்மேல்" பசி தாகமா யிருத்தல் பற்றிப் பேசினார் (மத். 5:6).[31] தேவன்மீதான தாகம் ஒன்று ஒவ்வொரு ஆத்துமாவிலும் தங்கியுள்ளது. ஆனால் மனிதர்கள், ஆவிக்குரிய இந்த ஏக்கத்தை, மக்கள், அதிகாரம், உடைமைகள், இன்பங்கள் மற்றும் புகழ் ஆகியவற்றைக் கொண்டு மங்கச் செய்ய முயற்சி மேற்கொண்டிருக் கின்றார்கள்.[32] இருப்பினும் முடிவில், உடல்ரீதியான தாகத்தை உப்புத் தண்ணீர் தீர்த்துவைக்காதது போலவே, இப்படிப்பட்டவைகள், ஆத்துமா வின் ஏக்கத்தைத் தீர்த்து வைக்க மாட்டாது.[33] கர்த்தரால் மட்டுமே ஆவியைத் திருப்தியடைச் செய்ய முடியும். இதை ஒப்புக்கொள்ளுதலே முதலாவது நிபந்தனையாக உள்ளது. அவரின்றி, நாம் பற்றியெரிகிற தணிக்க முடியாத தாகத்தை நமக்குள்ளாகக் கொண்டிருக்கின்றோம்.

(2) கிறிஸ்து ஒருவரே, அவர் ஒருவர் மாத்திரமே அந்தத் தாகத்தைத் தணிக்க முடியும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். "நான் தாகமாயிருக்கிறேன்" என்று கூறுவது மட்டும் போதுமானதல்ல; புத்துணர் வூட்டும் ஆதாரமூலம் என்ற வகையில் இயேசுவை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். கர்த்தர், "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்திலே வந்து, பானம்பண்ணக்கடவன். … என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, 'அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்'" என்று கூறினார் (யோவா. 7:37, 38).

வசனம் 38ல் கிறிஸ்துவின்மீது விசுவாசமாயிருத்தலின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இது, சந்தர்ப்பப்பொருளில், யூதர்கள் அவரை மேசியா என்ற வகையில் ஏற்றுக்கொள்வதைக் குறித்தது. அடுத்த அத்தியாயத்தில் அவர், "நானே அவர் [வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா] என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறினார் (யோவா. 8:24). இது, "விசுவாசத்தினால் மட்டுமே" இரட்சிப்பு உண்டாகிறது என்று கூறுவதல்ல (யாக். 2:24ஐக் காணவும்).[34] இது, இயேசுவே நமது விசுவாசத்தின் கவனக்குவிப்பாக இருக்க வேண்டும் என்று கூறுதலாக உள்ளது.

(3) நாம் நமது விசுவாசத்தின்படி செயல்பட வேண்டும். நாம் தாகமாயிருக்கின்றோம் என்று அறிந்திருந்தால் மட்டும் போதாது; அந்தத் தாகத்தைக் கிறிஸ்து ஒருவரே தணிக்க முடியும் என்று புரிந்து கொண்டிருந்தால் மட்டும் கூட அதுவும் போதாது; கர்த்தருடைய அளிப்பை அனுகூலப்படுத்திக் கொள்வதற்கு நாம் சிலவற்றைச் செய்ய

வேண்டும். இதை நமது வேத பாடப் பகுதியானது "வந்து" மற்றும் "பானம் பண்ணுதல்" என்பது போன்ற வார்த்தைகளைக் கொண்டு தெளிவாக்குகிறது. கிறிஸ்துவிடம் வருதல் என்பது, அவரைக் கர்த்தர் என்று ஒப்புக் கொண்டு, அவரது சித்தத்தைச் செய்வதற்கு ஒருவர் தம்மை ஒப்புக் கொடுத்தல் என்பதாக உள்ளது. பானம்பண்ணுதல் என்பது, அவருடைய ஆசீர்வாதங்களில் பங்கேற்று அவற்றை நமது இருத்தலின் ஒரு பாகமாக்குதல் என்பதாக உள்ளது. நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு, அவரது சித்தத்தைச் செய்யும்போது, நாம் அவரது பாகமாகின்றோம் மற்றும் அவர் நமது பாகமாகின்றார். கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு எழுதினார்: "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் *கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே*" (கலா. 3:26, 27).

குளிர்ந்த, தூய்மையான, ஸ்படிகம் போலத் தெளிவான தண்ணீர் ஓடுகின்ற அகன்ற நதியொன்றை உங்கள் மனதில் சித்தரித்துக் கொள்ளுங்கள். பின்பு, அந்த நதியின் இருபக்கத்திலும் வெளுப்பாக்கப்பட்ட எலும்புகள் - உயிர்கொடுக்கும் அந்த நீரோடையில் இருந்து சில அங்குலங்கள் தூரத்தில் இருந்தும் தாகத்தினால் இறந்துபோன மனிதர்கள் மற்றும் விலங்குகளின் எலும்புகள் - இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். இயல்பான இவ்வுலகில் இப்படிப்பட்ட ஒரு துன்பகரமான நிகழ்ச்சியைப் புரிந்துகொள்ளுதல் என்பது கடினமானதாக இருக்கும், ஆனால் ஆவிக்குரிய வட்டாரத்தில் இது மிகச் சாதாரணமானதாக உள்ளது. ஆயிரக்கணக்கானவர்கள், ஏன், பல இலட்சக் கணக்கானவர்கள் - ஜீவத் தண்ணீரின் ஆதாரமூலமாகிய - இயேசு அவர்கள் பற்றிக்கொள்ளக்கூடிய தூரத்தில் இருந்தபோதிலும், ஆவிக்குரிய தண்ணீர்ப் பற்றாக்குறையால் இறந்து போனார்கள். அவர்கள் தங்கள் ஆவிக்குரிய தேவையை அறியாதிருந்தார்கள் என்பதே பிரச்சனையாக இருந்தது. அவர்கள், அவர்மீது விசுவாசம் கொள்ளவும், அவரில் பானம்பண்ணிப் புத்துணர்வு அடையும்படி அவரிடமாய்த் தங்கள் வாழ்வைத் திருப்பவும் மறுத்தார்கள்.

## முடிவுரை

உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் ஆவிக்குரிய தாகத்தை அறிந்திருக்கின்றீர்களா? ஆம் என்றால், இன்றே கிறிஸ்துவிடம் வருவதைத் தள்ளிப்போடாதீர்கள். உங்களுக்குப் பாவமன்னிப்பு தேவையா? அவரிடத்தில் வந்து பருகுங்கள். உங்களுக்கு பலம் தேவையா? அவரிடத்தில் வந்து பருகுங்கள். உங்களைப் புரிந்துகொள்ள, உங்கள் பக்கமாய் நிற்க யாரேனும் ஒருவர் தேவையா? அவரிடத்தில் வந்து பருகுங்கள். உங்கள் வாழ்வை மாற்றுவதற்கு வல்லமை தேவையா? அவரிடத்தில் வந்து பருகுங்கள். உங்களுக்கு ஆவிக்குரிய புதுப்பித்தல் தேவையா? அவரிடத்தில் வந்து பருகுங்கள். உங்களுக்கு வாழ்வில் ஒரு இலக்கும் நோக்கமும்

*தேவையா? அவரிடத்தில் வந்து பருகுங்கள்.*

*இந்தப் பாடத்தில், நாம் "யூதா கோத்திரத்துச் சிங்கத்தை" (வெளி. 5:5) முகமுகமாய் எதிர்கொண்டோம். நாம் ஓடுவதை நிறுத்தும்படி அவர் நம்மிடம் வற்புறுத்துகின்றார். அவர் இல்லாமல் நாம் ஒருக்காலும் நமது ஆவிக்குரிய தாகத்தைத் தணித்துக் கொள்ள முடியாது என்று அவர் நம்மிடத்தில் கூறுகின்றார். ''நான் இன்னொரு நீரோடையைக் கண்டறிவேன்'' என்று நீங்கள் அவரிடத்தில் கூறுகின்றீர்களா? வேறு நீரோடை எதுவும் இல்லை. ''நான் இறந்து போவேனோ என்று உணருகின்றேன்'' என்று நீங்கள் கூறுகின்றீர்களா? நீங்கள் அவரிடத்திற்கு வராவிட்டால், ஆவிக்குரிய வகையில் இறந்து போவீர்கள். நீங்கள் ஓடுவதில் களைப்படைந்து தாகத்தினால் இளைப்படைந்து இருந்தால், இன்றே அவரிடத்தில் வாருங்கள் (மாற். 16:15, 16; அப். 2:36-38; கலா. 3:26, 27).[35]*

---

*குறிப்புகள்*

*[1]மே 1987ல் எனது முதுகுப் பகுதியில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சையில் இருந்து நான் சுகமாகிக் கொண்டிருந்தபோது, ரஸ்டி பீட்டர்மேன் அவர்கள், டெக்ஸாஸின் ஃபோர்ட்வொர்த் என்ற இடத்தில் இருந்த பிரவுன் ட்ரெய்ல் கிறிஸ்துவின் சபையில் என்னிடத்தை நிரப்பினார், அங்கு அவர் "ஜீவத்தண்ணீர்" என்ற தலைப்பில் பிரசங்கித்தார். எனது இந்தப் பிரசங்கத்திற்கு இன்னும் மற்ற ஆதாரமூலங்கள் பலவற்றிலிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டேன், ஆனால் இது பெரும்பாலும் பீட்டர்மேனின் எடுத்துரைப்பின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அடிக்குறிப்புகள் எதுவும் குறிப்பிடப்படாத இடங்களில், விவரிப்புகள் யாவையும் அவரது பிரசங்கத்தில் இருந்தே வருகின்றன. [2]இந்தத் தூரமானது 8,848 மீட்டர்களுக்குச் சமமானது. [3]சாதனையாளர்களின் இந்தக் குழுவில் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த சர் எட்மண்ட் ஹில்லரி என்பவர் நன்கு அறியப்பட்டவராக இருக்கின்றார். [4]மிகுந்த உயரங்களில், குறைவான உயிர்வளி கிடைத்தல், வேகமான காற்றுக்கள், மற்றும் மிக அதிகமான குளிர் ஆகியவற்றை சமாளிக்க விசேஷித்த கருவிகள் முன்னதாக மேம்படுத்தப்பட்டிருந்தன. இவை யாவும் முக்கியமானவைகளாகவும் அத்தியாவசியமானவைகளாவும் இருந்தன, ஆனால் போதுமான தண்ணீருக்கான இந்தக் கூடுதல் வசதியானது வெற்றிக்குத் தேவையான கடைசிக் கூறாக இருந்தது என்பது உறுதி. [5]உபா. 16:16ல் இந்த மூன்று பண்டிகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. பஸ்காவும் (புளிப்பில்லாத அப்பப் பண்டிகை), பெந்தெகொஸ்தேயும் (வாரங்களின் பண்டிகை) மற்ற இரண்டு பிரதான பண்டிகைகளாய் இருந்தன. [6]நான் ஒரு சிறுவனாக இருந்தபோது, இவை போன்ற அமைப்புகள், உலகில் நான் வாழும் பகுதியில், "brush arbors" (மரவீடுகள்) என்று அழைக்கப்பட்டன. [7]இந்தக் காரணத்திற்காக, இது சேர்ப்புக்காலப் பண்டிகை என்றும் அறியப்பட்டது (யாத். 23:16; 34:22). [8]பண்டிகையின் சடங்காச்சாரத்துவத்தில், இந்த சரவிளக்கானது யூதர்களுக்கு அவர்களின் முன்னோர்களை வனாந்தரத்தில் வழிநடத்திய அக்கினிஸ்தம்பத்தை நினைவூட்டிற்றது. [9]அர்த்தத்தின் மூன்றாவது அடுக்கு ஒன்றைக் குறிப்பிட முடியும்: சாலொமோனின் தேவாலயம் கூடாரங்களின் பண்டிகையின்போது அர்ப்பணிக்கப்பட்டிருந்தது (1 இரா. 8:2). இவ்விதமாக, பண்டிகையின்*

வைபவங்களில் தேவாலயத்திற்கு விசேஷித்த கவனம் தரப்பட்டது. மற்ற இரண்டு பிரதான வலியுறுத்தங்களுடனும் ஒப்பிடும்போது இது சிறியதாக இருந்தாலும், இந்த அமைவு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. [10]ஊற்று மற்றும் குளம் ஆகியவை பற்றிய அதிக தகவல்களுக்கு, இந்தப் புத்தகத்தில் உள்ள ''நான் பார்வையற்றவனாயிருந்தேன், ஆனால் இப்போது பார்க்கின்றேன்'' என்ற பிரசங்கத்தில் காணவும்.

[11]இந்தப் பண்டிகையின்போது நடைபெற்ற செயல்களை *மிஷ்னா* புத்தகம் சுக்கா 4.1-5.6 பகுதியில் விவரிக்கிறது. [12]நீங்கள் இந்த வரலாற்றை யாத்திராகமம் 17ல் இருந்து மறுகண்ணோட்டமிட விரும்பலாம். [13]உங்கள் உரையைக் கேட்பவர்கள் ஆராதனை ஊழியத்திற்கென்று கூடும் இடத்தில், ஆராதனையின்போது நடைபெற்ற இதே போன்ற ஒரு இடைமறித்தலைக் கற்பனை செய்து பார்க்கும்படி அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளுங்கள். [14]இயேசு இந்த வார்த்தைகளை வைபவத்தின்போது பேசினாரா அல்லது அதற்குப் பின்பு பேசினாரா என்று நமக்குக் கூறப்படவில்லை, அது ஒரு பெரிய விஷயமும் அல்ல. எப்படியிருப்பினும், அந்த வைபவமானது கூட்டத்தில் இருந்தவர்களின் சிந்தைகளில் புத்தம் புதியதாக இருந்திருக்கும். [15]உலகில் நீங்கள் வாழும் பகுதியில் ஆராதனை ஊழியத்திற்கு ஏற்புடைய வகையில் இந்தப் பத்தியை மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். ஆராதனை ஊழியங்களின்போது என்ன செய்யப்பட்டது என்பதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வது உங்கள் நோக்கமல்ல என்பதைத் தெளிவாக்குங்கள். தேவன் குறிப்பிட்டபடி மிகச் சரியாக ஆராதனை நடத்தப்பட வேண்டும் (யோவா. 4:24). ஆயினும், அது எப்போதாவது வெறுமையான சடங்குக்கு மேல் ஒன்றுமற்றதானால், அது மதிப்பற்றதாக உள்ளது. [16]இந்த மொழிபெயர்ப்புகள், NIV, RSV மற்றும் NKJV ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. [17]முதல் மாறுபாடு மொழிபெயர்ப்பாளர்களால் தேர்ந்துகொள்ளப்பட்டாலும், இரண்டாவது மாறுபாடே சந்தர்ப்பப்பொருளுக்குச் சிறப்பாகப் பொருந்துகிறது. எடுத்துக்காட்டாக, வசனம் 39, இயேசு அனுப்பவிருந்த பரிசுத்த ஆவியானவரை "தண்ணீர்" என்பதாக அடையாளப்படுத்துகிறது (யோவா. 15:26ஐக் காணவும்). [18]ஹார்வர்டு என்பது அமெரிக்காவில் மதிப்பு வாய்ந்த ஒரு பல்கலைக் கழகமாக உள்ளது. [19]டிரெட்மில் என்பது ஒருவர் நடக்கக் கூடும்படிக்கு அகன்ற, நகருகின்ற பட்டி (பெல்ட்) ஒன்றைக் கொண்ட ஒரு இயந்திரமாகும். டிரெட்மில்கள் பயிற்சி, (இதயப் பரிசோதனைகள் போன்ற) மருத்துவ சோதனைகள் மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. [20]கர்த்தர் எப்போதுமே ஜீவத் தண்ணீரின் ஆதாரமூலமாக இருந்துள்ளார் (எரே. 2:13; 17:13).

[21]நியூயார்க் நகரம், எழுபது இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது, அதன் நகர்ப்புறப் பகுதியில் ஒரு கோடியே எண்பது இலட்சத் திற்கும் அதிகமான மக்கள் இருக்கின்றார்கள். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நியூயார்க் நகரம் பழக்கமற்றதாக இருந்தால், அவர்கள் நன்கு கேள்விப்பட்ட நகர்ப் பகுதியொன்றைக் கூறி அதற்குத்தக்காற்போன்று இந்த எண்ணிக்கையையும் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [22]தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள், சிலுவையில் இயேசுவின் விலாவிலிருந்து வந்த இரத்தத்தையும் தண்ணீரையும் (யோவா. 19:34) குறிப்பிட விரும்பினார்கள், அதாவது தண்ணீரின் சொட்டானது ஆசீர்வாதத்தின் மகா ஊற்றானது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். [23]தண்ணீரை ஊற்றுதல் என்பது தேவனுடைய ஆவியானவர் ஊற்றப்படுதலை முன்நிழலிட்டது என்று யூதர்கள் நினைத்தபடியால், இது தண்ணீர்ச் சடங்குடன் ஒரு இயல்பான பிணைப்பாயிருந்தது. இதைப் பற்றி அதிகமான தகவல்களை இதற்கு முன்னுள்ள "எருசலேமுக்குப் பயணப்படுதல்" என்ற பாடத்தில் காணவும். [24]யோவான் இதை

எழுதியபோது, பெந்தெகொஸ்தேயில் ஆவியை அனுப்புதல் என்பது கடந்த கால நிகழ்ச்சியாக இருந்தது. [25]ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விசுவாசிக்கும் தரப்படுகிற அற்புதமற்ற வகையிலான பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பற்றி விரிவாய்க் கூறுதல் என்பது இந்தப் பிரசங்கத்தின் நோக்கமாக இருப்பதில்லை (இது உள்ளாக வாசம் பண்ணுதல் என்று நிருபங்களில் பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது: ரோமர் 8:9, 11; 1 கொரி. 3:16; 2 தீமோ. 1:14; யாக். 4:5). தேவைப்பட்டால், நீங்கள் இந்தப் பகுதியை விரிவாக்கலாம். [26]அப். 3:19ல் பேதுருவின் கூற்றானது அடிப்படையில் அப். 2:38ல் அவரது கூற்றைப் போன்றதாகவே அர்த்தப்படுவதாக இருக்க வேண்டும் என்று பொதுவாக யூகிக்கப்படுகிறது. விஷயம் அதுவாக இருக்கையில், “பரிசுத்த ஆவியின் வரம்” என்பது “இளைப்பாறுதலின் காலங்கள்” என்பதற்குச் சமமானதாக உள்ளது. [27]வசனம் 38ல் உள்ள “அவன் உள்ளத்திலிருந்து” என்ற சொற்றொடர் (பெரும் பாலான மொழிபெயர்ப்பாளர்கள் நினைக்கின்றபடி) விசுவாசியைக் குறிப்பிடுவதாயிருந்தால், மற்றவர்களுக்கு நம்மில் இருந்து பெருக்கெடுத்தோடும்படியான ஆசீர்வாதம் நம்மிடத்தில் நிரம்பி வழியும் என்ற வாக்குத்தத்தம் இவ்விடத்தில் மறைமுகமாகக் குறிப்பிடப்படலாம். இந்த வசனத்தில் கிறிஸ்து இதைத் திட்டவட்டமாகத் தமது சிந்தையில் கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், கருத்து மிகச் சரியானதாக உள்ளது. [28]இயேசு ஒன்றாய் கூடிய வைபவத்திற்கு மாறாக தனிப்பட்ட பதில்செயலுக்கு அழைக்கின்றார். [29]ரஸ்டி பீட்டர்மேன் அவர்கள் தமது உரையைக் கேட்ட அமெரிக்கர்களுக்கு நடைமுறைப் படுத்துவதற்காக, “நம்மில் பலருக்கு, தாகமாயிருத்தல் என்றால் தொலைக்காட்சியில் விளம்பர நிகழ்ச்சிகள் முடியும் வரை ஒரு பானம் அருந்துதல் அல்லது தண்ணீர் குளிர்விக்கும் கருவியினிடத்தில் செல்லுவதற்கு ஆராதனை முடியும் வரையில் காத்திருத்தல் என்று அர்த்தப்படுவதாகவே இருக்கும்” என்று கூறினார். நீங்கள் கடுமையான தாகத்தை மக்கள் அனுபவிக்கும் இடத்தில் வாழலாம் அல்லது வேறிடத்தில் வாழலாம்; தேவைக்கேற்றபடி பிரசங்கத்தின் இந்தப் பகுதியைத் தழுவியமைத்துக் கொள்ளவும். [30]எனது உரையைக் கேட்டவர்களில் பலர் சந்திரனின் [நிலவின்] வெறுமையான மேற்பரப்பின் புகைப்படங்களைப் பார்த்திருக்கின்றார்கள். உங்கள் உரையைக் கேட்பவர்கள் அவற்றைப் பார்த்ததில்லையென்றால், வேறொரு ஒப்பீட்டைப் பயன்படுத்துங்கள்.

[31]இதை ஆவிக்குரிய தேவையை உணர்ந்தறிதலுக்கு ஒரு உருவகமாகப் பல வேத வசனப்பகுதிகள் பயன்படுத்துகின்றன (சங். 42:1, 2; வெளி. 22:17 ஆகியவற்றைக் காணவும்). [32]நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருந்தும்படி இந்த வாக்கியத்தைத் தழுவியமைத்து விரிவாக்குங்கள். [33]கடலில் வழிதப்பிச் செல்லுகின்றவர்கள் நம்பிக்கையிழந்த நிலையில் கடல் தண்ணீரைக் குடிக்கின்றார்கள், ஆனால் உப்புத்தண்ணீரானது அவர்களைத் திருப்திப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களின் தாகத்தை வலுப்படுத்துவதையே அவர்கள் கண்டறிகின்றார்கள். உங்கள் உரையைக் கேட்பவர்கள், அந்த ஒப்புவமையைப் புரிந்துகொள்ளாவிட்டால், நீங்கள் எரே. 2:13ஐப் பயன்படுத்த முடியும்: கர்த்தருடைய ஆவிக்குரிய புத்துணர்வூட்டுதலுக்குப் பதிலீடைக் கண்டறிய முயற்சிப்பதில், மனிதர்கள், தண்ணீரைப் பிடித்து வைத்துக்கொள்ள இயலாத வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வனைந்து கொண்டார்கள். [34]கீழ்ப்படிகிற விசுவாசமே இரட்சிக்கிற விசுவாசமாக உள்ளது என்பதைச் சுட்டிக்காண்பிக்க நீங்கள் விரும்பலாம் (ரோமர் 1:5; 16:26; கலா. 5:6; யாக். 2:22). விசுவாசம் என்பது மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும் (மாற். 16:15, 16; அப். 2:38; கலா. 3:26, 27). [35]இந்த அழைப்பில் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு வலியுறுத்தம் உள்ளது,

*ஆனால் கர்த்தருடனான தங்கள் உறவுமுறையைப் புறக்கணிக்கின்ற கிறிஸ்தவர்களும் கூட ஆவிக்குரிய தாகத்தை அனுபவிக்கக் கூடும். கிறிஸ்தவர்கள் ஆதியிலே கொண்டிருந்த அன்புக்கு (வெளி. 2:4; அப். 8:22; யாக். 5:16) திரும்பி வரும்படியான வலியுறுத்தம் ஒன்றை நீங்கள் கூட்டிக்கொள்ள விரும்பலாம்.*